[1980 பிப்ரவரி 7

கொல்லி மலையில் காட்டு நிலங்கள்.

* வினா எண் 88 —திரு. வ. சின்னச்சாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லி மலையில் உள்ள பராஸ்ட் சோலைகளில் எத்தனை ஏக்கர் காபி, ஏலம் வைக்க எத்தனை ஆண்டு, எவ்வளவு ரூபாய்க்கு குத்தகைக்கு விடப் பட்டுள்ளது?

(ஆ) இன்னும் எத்தனை ஏக்கர் குத்தகைக்கு விடப்படாமல் இருக்கிறது?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) காபி பயிரிட கொல்லி மலையில் வனத்துறை காட்டில் எந்த இடமும் குத்தகைக்கு விடப்படவில்லை. கொல்லி மலையில் காரவல்லி காப்புக் காடுகளில் மொத்தம் 42.90 ஹெக்டேர் நிலத்தை பத்து குத்தகைகளாக ஏலக்காய் பயிரிட விடப்பட்டது. குத்தகைக் காலம் 25 ஆண்டுகள். மொத்த குத்தகைத் தொகை ரூ. 64,206. இதில் 6 குத்தகைகள் முறையாக கிஸ்தி தொகை கட்டாததால் நடைமுறையில் இல்லை. 4 குத்தகைகள் மட்டும் நடைமுறையில் உள்ளன.

(ஆ) சேலம் வனக்கோட்டத்தில் காபியோ (அ) ஏலமோ பயிரிடுவதற்கு நிலம் குத்தகைக்கு விடும் உத்தேசம் எதுவுமில்லை.

(முற்பகல் 9-40)

திரு. சி. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் அனுமதிக்க முடியாது.

திரு. சி. ஆறுமுகம்: சரி, கேள்வி நேரம் முடியட்டும். தெரிந்து கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் இப்படி நடந்துகொள்வதை நான் அனுமதிக்கப் போவது இல்லை. 'கேள்வி நேரம் முடியட்டும் தெரிந்து கொள்ளலாம்' என்பதை இந்த அவை ஏற்றுக் கொள்கிறதா? நான் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

1980 பிப்ரவரி 7]

திரு. சென்னை மு. அரங்கநாதன்: நேற்றைக்கு திரு. கூத்தகுடி சண்முகம் கேட்டாரே, அதற்கு என்ன சொன்னீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களது பலஹீனத்தை மறைப்பதற்காக மற்றவர்களைச் சுட்டிக் காட்டி உறுப்பினர்கள் கேள்வி கேட்கக் கூடாது. 'கேள்வி நேரம் முடியட்டும் பார்த்துக் கொள்கிறேன்' என்பது என்ன பேச்சு இது என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன்: 'பார்த்துக் கொள்கிறேன்' என்று அவர் சொல்லவில்லை. 'தெரிந்து கொள்ளலாம்' என்று சொன்னார். தாங்கள் சபாநாயகர் என்ற மிகப் பெரிய பொறுப்பில் அமர்ந்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'தெரிந்து கொள்ளலாம்' என்று சொன்னதற்குத்தான் என்ன அர்த்தம் என்று பதில் சொல்லுங்கள். உறுப்பினர் பேரவையை மிரட்டுகிறாரா, அல்லது பேரவைத் தலைவரை மிரட்டுகிறாரா? (குறுக்கீடு) முதலில் இருந்து பார்த்துக் கொண்டு இருக்கிறேன், அவர் அப்படித்தான் நடந்து கொள்கிறார்.

திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்கள், திரு. ஆறுமுகம் அவர்களோடு தாங்கள் நண்பராக இருந்து பழகியவர்.. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நண்பராகப் பழகியது என்பது வேறு. 'கேள்வி நேரம் முடியட்டும், தெரிந்து கொள்ளலாம்' என்று அவர் கூறுவது நல்லதா? பேரவைத் தலைவராக உங்களுடைய ஒத்துழைப்பு பெற்று இங்கே உட்கார்ந்த பிறகு நான் யாருக்கும் பயப்படத் தேவையில்லை. உங்களுடைய அத்தனை பேரின் ஒத்துழைப்பு இருக்கிற வரைக்கும் நான் எதற்கும் பயப்படுபவனும் அல்ல. இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவது நல்லதல்ல.

திரு. க. அன்பழகன்: தயவு செய்து உட்காருங்கள், சொல்கிறேன். நான் ஏதாவது சொல்ல வேண்டுமானால், பேரவைத் தலைவர் உட்கார்ந்தால்தான் சொல்ல முடியும். ஆகையினால்தான் உட்காருங்கள் என்று கேட்டுக் கொண்டேன். அதைத் தாங்கள் அவமரியாதை என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். கேள்வி நேரத்தில் எழுப்பக் கூடாது என்று தாங்கள் தீர்ப்பு சொன்னீர்கள். ஆகவே, அவர் கேள்வி நேரம் முடிந்த பிறகு தெரிந்து கொள்ளலாம் என்று சொன்னார். அப்படி அவர் சொல்கிறபோது அவருடைய [illegible] பான உணர்வுகளில்

சொன்னார். அவரைத் தாங்கள் நன்றாக அறிந்தவர். அதைத் தாங்கள் வேறு விதத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு திரையரங்கு கழகத்தின் மூலம் கடன் வழங்கல்.

*வினா எண். 89 திரு. து புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு கூட்டுறவு முறையில் திரையரங்கு அமைப்பதற்கான தமிழ்நாடு திரையரங்கு கழகத்தின் மூலம் கடனுதவி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): கூட்டுறவு முறையில் திரை அரங்கு அமைப்பதற்குக் கடனுதவி அளிக்கும்போது படித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென தமிழ்நாடு திரையரங்கு கழகத்தை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. திரையரங்கு கழகத்தின் சங்க அமைப்பின் விதிக் குறிப்பில் கண்டுள்ள சங்கத்தின் நோக்கம் பற்றிய விதிகள் திருத்தியமைத்த பிறகு நிதியுதவி வழங்கப்பெறும்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரிகளுக்கு தியேட்டர் கார்ப்பரேஷன் நிதி தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். படித்த பட்டதாரி என்றால் ஆர்ட்ஸ் படித்தவர்களா, சயன்ஸ் படித்தவர்களா, எம்.பி.பி.எஸ்., பி.இ. என்று இப்படிப்பட்ட பட்டதாரிகளுக்கும் கடன் உதவி அளிக்கப்படுகிறதா அல்லது கலைத் துறையில் சினிமாத் துறையில் ஏதாவது பட்டம் படித்தவர்களுக்கு மட்டும் தான் கடன் உதவி அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்பு கிறேன். அதைப்போல், கடன் பெறுகிறவர்கள், 'இனிசியல் கேப்பிடல்' முதலீடு எவ்வளவு செலவிட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டு உள்ளதா? இது வரையில் எவ்வளவு பேருக்கு இப்படிக் கூட்டுறவு முறையில் கடன் வசதி செய்யப் பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, பல்கலைக் கழகத்திலே பி.ஏ., எம். ஏ.